# அமைச்சரவையில் மாற்றம்; 5 அமைச்சர்கள் புதிதாக நியமனம்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 65 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 29 இதழ் 177
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13 – 8 – 199


(கொழும்பு) ஜனாதிபதி திரு டி.பி.விஜே துங்க தனது அமைச்சரவை யில் நேற்று முதல் தடவை யாக சில மாற்றங்களைச் செய்துள்ளார்.

இதுவரை காலமும் நீதி, கல்வி, உயர்கல்வி அமைச்ச ராக பதவிவகித்த ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் மீண்டும் வெளிநாட்டு அமைச்சராக

(5-ம் பக்கம் பார்க்க)

## நிதி - பாதுகாப்பு ஜனாதிபதி பொறுப்பில்

(கொழும்பு) நேற்றுமேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தில் நிதி அமைச்சர் பதவிக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவிக்கும் எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்த முக்கிய இரண்டு அமைச்சுக்களின் பொறுப்புக ளையும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தொடர்ந்து

(6-ம் பக்கம் பார்க்க)

# கைதிகளை அரசு கைவிட்டதால் உறவினர் கொழும்பு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் உண்ணாவிரதமிருக்கும் யுத்தக் கைதிகள் விடுவிப்பு குறித்து ஸ்ரீ லங்கா அரசு உருப்படியான எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாத காரணத் தால் கைதிகளின் உறவினர் நேற்று கொழும்பு திரும்பினர்.

கடந்த 54 தினங்களாக யுத் தக் கைதிகளின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந் தனர். எனினும் கைதிகளின் விடுவிப்புக்குறித்து அரசுதரப் பில் உருப்படியான எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள் ளப்படவில்லை. இதனையடுத்து இவர்கள் அனைவரும் கொழு ம்பு திரும்பியுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

நேற்று பிற்பகல் 2 மணிவரை சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் 31 பேரும் மருத்துவத்துறைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்

(6 ம் பக்கம் பார்க்க)

## இளாலி படகு விபத்து: இருவர் சடலங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்) கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இளாலிக்கடலில் இடம்பெற்ற படகு விபத்தில் மரணமடைந்த இருபெண்களின் சடலங்கள் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்டன. இவர்கள் நெல்லியடி கர

(6 ம் பக்கம் பார்க்க)

## ஆணின் சடலம் கரை ஒதுங்கியது

(எழுதுமட்டுவாள்) இளாலியில் நடைபெற்ற படகு விபத்தில் இறந்த மரணமான மேதிலைச் சேரு வைவெட் டித்துறை) என்பவரது சடலம் நேற்றுக்காலை இளாலி கடலில் கரை ஒதுங்கியது. இவரது சட லம் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டது.

(6 ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை மாற்றம்: ஐ. ஐ. தே. முன்னணியை அரசுடன் இணைப்பதே குறிக்கோள்?

(கொழும்பு) ஜனாதிபதி டி. பி. விஜே துங்காவின் முதல் அமைச் சரவை மாற்றம் குறித்து தகவல் வெளியானதும், இரண்டு வருடங்களுக்கு முன் னர் ஆளும் கட்சியை விட்டு வெளியேறிய முன்னாள் அமைச்சர்களுக்கு இடம் தரவே இந்த மாற்றம் என அரசு வட்டாரங்களில் கருதப் பட்டது.

அடுத்த ஆண்டில் ஜனாதி பதித் தேர்தல் நடைபெற வுள்ளது: எனவே ஐக்கிய தேசியக்கட்சியும் ஜனநாயக ஐக்கிய தேசிய கூட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## இளாலி - பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்) இளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக் கிழமை மட்டும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## இம்மாதம் முதல் அரச ஊழியர்க்கு 40 வீத சம்பள அதிகரிப்பு

(கொழும்பு) அரச ஊழியர்களுக்கான 40 சதவீத சம்பள உயர்வு இம் மாதம் முதல் வழங்கப்படவுள் ளது.

இதற்குத் தேவையான நிதியை வழங்குமாறு ஜனாதி பதி டி. பி விஜேதுங்கா திறை சேரி அதிகாரிகளைப் பணித் துள்ளார்.

ஆரம்பசம்பளமாக மூவாயி ரம் ரூபாவையும் அதற்குக் குறைவாகவும் பெறுபவர்க

(6-ம் பக்கம் பார்க்க)

# 1129 இல. தமிழ் அகதிகள் கப்பலில் அனுப்பி வைப்பு

(சென்னை) மனித நேய அமைப்புக் களின் வேண்டுகோள்களைப் புறக்கணித்து தமிழக அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்பியுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதி களில் 255 குடும்பங்களைச் சேர்ந்த 1129 பேர் நேற்றுக் காலை சென்னையிலிருந்து நிக் கோபார் கப்பலில் இலங்

(6-ம்பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் புலிகள் சூடு சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்) ஆனையிறவுப் பகுதியில் கட்டைதீவு கடற்பகுதியில்வேலை செய்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை மேற் கொண்ட சினைப்பர் தாக்குத லில் சிப்பாய் ஒருவர் கொல் லப்பட்டார். மற்றைய சிப் பாய் காயத்துடன் தப்பி ஓடி விட்டார்

நேற்றுக்காலை 9-10 மணிய ளவில் விடுதலைப்புலிகள் மேற் கொண்ட தாக்குதலையடுத்து

(6-ம் பக்கம் பார்க்க)

## வாரம் இருமுறை அகதிகள் வருவர்

(சென்னை) ஒரு மாதகாலம் வரை நிக் கோபார் கப்பல் மூலம் தாய கம் செல்லும் அகதிகள் வாரம் இருமுறை அனுப்பி வைக்கப் படுவார்கள் என்று தமிழக அகதிகள் நல ஒருங்கிணைப்பா ளர் திரு. கி. என். இராமதாஸ் தெரிவித்தார்.

பத்துமாத காலத்திற்கு பின்னர் அகதிகளை அவர்கள் தாயகத்திற்கு அனுப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என் றும் இதுவரை 29 000 பேர் அனுப்பப்பட்டிருப்பதாகவும் மேலும் 7000 பேர் தாயகம் செல்ல விரும்புவதாகவும்

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் விடயத்தில் இந்தியா வேறுபாடு

### தமிழக முன்னாள் அமைச்சர்

(சென்னை) "இந்திய மத்திய அரசு தென். ஆபிரிக்காவில் கறுப் பின மக்கள் நசுக்கப்படுவதை கண்டிக்கின்றது அதே நேரம் இலங்கைத் தமிழ் அகதிகளை

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டம்

(லண்டன்) தமிழகத்திலிருந்து இலங் கைத் தமிழ் அகதிகளை இலங் கைக்குத் திருப்பி அனுப்புவ தற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக இந்திய - இலங்கை நட்புறவுச் சங்கத்தின் மூலம் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நேற்று தமிழகத்தில் நடத்தப்பட்டது.

தி. மு. க. மற்றும் பாட்

(6ம் பக்கம் பார்க்க)

## இராஜாங்க அமைச்சர்கள் பதவிகளிலும் மாற்றம் வரும்

(கொழும்பு) இராஜாங்க அமைச்சர்களின் பொறுப்புக்களிலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதி பதி டி. பி. விஜேதுங்கா நடவடிக்கை எடுக்கவிருப் பதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்துக்கு நீதி

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெளிவந்துவிட்டது

தோத்திரத்திரட்டு, கட்டு வழிபாடு ரூபா 30/- (மலிவுப் பதிப்பு அஷ்டலக்ஷ்மி புத்தக சாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-396)

### புத்தகங்கள் விற்பனை

பிரார்த்தனை மாலை (தோத்திரத்திரட்டு இந்திய நாவல்கள் டிக்சனெறிகள் ஆங்கில தமிழ் களஞ்சியம் (மற்றும் டிக்செனெறி) மக்மிலன் ஸ்ரீ சாந்தி புத்தகசாலை நல்லூர். (எ-3277)

### விற்பனைக்கு

நல்லை ஆதீனத்தில் பாலாஜி சமயப் புத்தகங்கள், இறுவட்டுகளுக்கான புத்தகங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம். (ஏ-3291)

### வியாழ மாற்றம் பலன்கள்

ஜோஸ்யர், முத்திரை, இறுவர்களுக்கு அறிவுநூல், கல்வி மற்புலத்துக்கு ஆய்வுநூல், பசமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலன்கள் ஸ்ரீ சாந்தி புத்தகசாலை நல்லூர், மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம் (சி-397)


## விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை விக்னேஸ்வரா பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் பாலர் பாடசாலை பெற்றோர் சங்கத் தலைவர் திரு. இ. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இவ்விளையாட்டு விழா தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக வடமராட்சி பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் தமிழீழ தேசியக் கொடி ஏற்ற ஆரம்பமானது. —52

## மூன்று பயிற்சி நெறிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியில் யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவிகளுக்கான மூன்று பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சு ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு உடை தைத்தல் ஆகிய மூன்றுபயிற்சி நெறிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவிகள் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. – 52

# செய்திச்சிதறல்

## ஓராண்டு நிறைவு விழா

(அரியாலை)

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் நீலக கோட்டம் நளாகல்வி வளர்ச்சிக்கழகத்தினர் கடந்த சனிக்கிழமை தமது ஓராண்டு நிறைவையொட்டி புனித. மரியாள் வித்தியாலய விளையாட்டரங்கில் ஓ. எல். ஆர்.) நாடகம், வில்லுப்பாட்டு பட்டிமன்றம் முதலிய நிகழ்ச்சிகளை நடாத்தினர். (59)

## இலவச வகுப்பு

(உடுவில்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மாணவர் அமைப்பின் இத்தமகேணி மாணவர் கல்வி வளர்ச்சிக்கழக பிரிவினரால் இத்தமகேணி லட்டு தொண்டோலம் தொழிற்பயிற்சி நிலையத்தில் இலவச வகுப்புகள் பாடசாலை மாணவ மாணவியர்களுக்காக நடாத்தப்பட்டு வருகின்றன, (109)

## மெய்வல்லுநர் போட்டி

(அரியாலை)

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை யாழ், இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக சமூக சேவைகள் திணைக்களப் பிரதி ஆணையாளர் திருமதி க சிவசிதம்பரம் கலந்து கொண்டார். (59)

## நூல்கள் கொள்வனவு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்தினால் நடாத்தப்பட்டு வரும் பொதுசன நூல் நிலையத்துக்கு இவ்வருடம் முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியுடையபுத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (109)

## சாரணர் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகால சாரணர் சேவை 33-வது வருடமாக யாழ் மாவட்ட சாரணர் சங்கம் வழமைபோல சேவையாற்றி வருகின்றது.

## விளையாட்டுப் போட்டி

(நெல்லியடி)

இன்பருட்டி கிராம முன்னேற்றச் சங்க 38-வது ஆண்டு விழாவும், மாவீரர் நினைவாக காண்டீபன் கழக விளையாட்டுப் போட்டிகளும் எதிர்வரும் 14-ம் 15-ம் திகதிகளில் பி. ப. 2 மணிக்கு நடைபெறவிருக்கின்றன. (160

## முத்திரை விநியோகம்

(தாவடி)

அண்மையில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட முத்திரைகள் அஞ்சல் அலுவலகம் உப அஞ்சல் அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குடாநாட்டினுள் முத்திரை தட்டுப்பாடு நீங்கியுள்ளது. – 163

## சாரணர் சின்னம் சூட்டும் விழா

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி சாரணர் சின்னம் சூட்டும் விழா கல்லூரி அதிபர் திரு. என் அனந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் அதிபர் எஸ். பூபாலசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (52)

## நோய்களால் பாதிப்பு

(கொழும்புத்துறை)

அரியாலை —ஸ் வீடமைப்புத் திட்டத்திலும் மணியம் தோட்டம், வசந்தபுரம் பகுதியிலும், இன்னமும் தொப்பளிப்பான்- வயிற்றோட்டம் நோய்களால் சிறுவர்கள் உட்பட அநேகர் பாதிக்கப்பட்டுள்ளனர். (154)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

ஆகஸ்ட் மாதத்திற்குரிய சில ஓய்வூதிய வவுச்சர்கள் கொழும்பிலிருந்து யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவுக்கு இன்னும் வந்து சேரவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## மருத்துவ பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவபீட மாணவர்களினால் மெதடிஸ்த திருச்சபை போதகர் அருட்திரு ஈ. டபிள்யு. ஜெபநேசன் தலைமையில் யாழ். நாவாந்துறை வசந்தபுரம் அண்ணா சன சமூக நிலையத்தில் மருத்துவப் பரிசோதனை ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

## தங்கத்தாத்தா விழா

(உடுவில்)

நவாலி ஸ்ரேசன் தமிழ்கலவன் பாடசாலையில் தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் விழா அதிபர் க. கணேசலிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது. -109

## மருந்து விநியோகம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு இவ்வருட 2ம் காலாண்டிற்கான மருந்து வகைகள் அண்மையில் விநியோகிக்கப்பட்டது. -72

## விவசாயப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

விவசாய அபிவிருத்திக்கான பல தரப்பட்ட நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகின்றது இதன் ஓர் அம்சமாக காலத்திற்கு காலம் விவசாய பயிற்சிகளை வழங்கி விவசாய அபிவிருத்திக்கான ஊக்குவிப்புக்களையும் ஏற்படுத்திவருகின்றது.

இம்மாதம் த. பொ. மேம்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட விவசாய பயிற்சியை முடித்துக்கொண்டு 30 பேர் வெளியேறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.


## மங்கல உற்பத்தியாளர்களுக்கு

யாழ். குடாநாட்டில் இன்று எதிர்நோக்கப்பட்டுப் பாரிய இறைப் பிரச்சனைகளை சமாளிக்குமுகமாக யாழ் குடாநாடெங்கும் பரவலாகவும், விரைவாகவும் இரட்டைச் சூட்டடுப்புகளை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறோம்

எனவே இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ள மட்கல உற்பத்தியாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**சக்திப் பகுதி,**
த. பொ. மே. கழகம்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.

(ஏ-3331)


# உள்ளூராட்சி ஊழியருக்கு விரைவில் ஓய்வூதியம்

(கொழும்பு)

உள்ளூராட்சி ஊழியர்க்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை விரைவில் அமுல் படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா தெரிவித்துள்ளார்

ஏற்கனவே அமைச்சரவை இத்திட்டத்தை அங்கீகரித்துள்ளதாகவும் விரைவில் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (கே-ரி)

# வடக்கு கிழக்கு பகுதிகளில் புதிய கல்வி அலுவலகங்கள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் புதிய கல்வி அலுவலகங்கள் விரைவில் திறக்கப் படவுள்ளன

இதற்கான நடவடிக்கையை வடக்கு கிழக்கு மாகாணகல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது. இது சம்பந்தமாக இவ் அமைச்சின் செயலாளரினால் சகல மாகாண கல்விப்பணிப்பாளர்கள், மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுநிருபத்தில் இவ் அலுவலகத்திற்கு தேவையான இடத்தையும் ஆளணியினரையும் தேர்ந்தெடுக்குமாறும், அதிகமான ஆசிரியர்களைக் கொண்டுள்ள பிரதேசங்களுக்கு கணக்குப்பதிவாளரும் லிகிதர்களும் அனுப்பப்பட வேண்டும். (71-ரி)

# பாதுகாப்பு வழங்கப்பட்ட பின்னரே பழனி, ராணிப்பேட்டை தேர்தல் நடத்தப்படும்

(சென்னை)

தமிழ் நாட்டில் மாத்திரம் இடைத்தேர்தல்கள் காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் மீண்டும் இடைத்தேர்தல்கள் நடத்துவதற்கான தேதிகளை தேர்தல் ஆணையகம் வெளியிட்டு வருகிறது.

பழனி, ராணிப்பேட்டை தேர்தல் தொகுதிகளுக்கு போதுமான அளவு மத்திய பொலிஸ் படை வந்த பின்பே தேர்தல் தேதிகள் அறிவிக்கப் படும் எனவும் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

தமிழ் நாட்டில் மாத்திரம் இத்தகைய உத்தரவை பிறப்பித்தது குறித்து பி. ஜே பி. அ. தி மு. க. உட்பட பல எதிர்கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. (கே-ரி)

## 9913 பேருக்கு சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் திருக்குடும்ப தியான இல்லத்தில் செயற்பட்டு வரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு கடந்த யூலை மாதத்தில் 9,913 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (72)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு முற்தேவை விபரங்கள் இத்துறையில் அனுபவமுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. மிருதங்கம்
2. உடுக்கு
3. தவில்
4. வீணை / தம்புரா தாங்கி
5. நடராஜர் சிலை (மரத்தினாலானது)
6. திருஞானசம்பந்தர் சிலை (மரத்தினாலானது)

விண்ணப்பிப்போர் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும்.

1. முழுப் பெயர்
2. தொழில் புரியும் முகவரி
3. அனுபவம்

மேற்குறிப்பிட்ட முற்தேவைகளைத் திருப்திசெய்து எம்மால் அங்கீகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளிடம் இருந்தே கேள்விப் பத்திரம் அழைக்கப்படும்

மேற்கூறப்பட்ட விபரங்களை "நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 1993-08-20 ஆம் திகதியன்று காலை 10 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'முற்தேவை விண்ணப்பம் கோரல்" எனக் குறிப்பிடவும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(ஏ-3336)

# குன்றின்மேலிட்ட தீபமென விளங்கிய

## ஆசிரியர் திரு. ஐயம்பிள்ளை பொன்னையா (அதிபர்) அவர்கள்

திரு. ஐயம்பிள்ளை பொன்னையா ஆசிரியர் அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் வேலணையின் முன்னோடியாகத் திகழ்ந்து வேலணையின் அபிவிருத்திப் பணிகளில் முன்னின்று உழைத்த ஒரு சிலருள் சிறப்பான இடத்தைப் பெற்றவர். இவர் கல்வி, சமய, சமூக அரசியல் பணிகளில் அயராது உழைத்து வேலணையின் உயர் நிலைக்குப் பெரிதும் பாடுபட்டார்.

அமைதி, பொறுமை, சுயநலமின்மை பிறரை மதிக்கும் பண்பு, கடுஞ்சொல்லின்மை முதலிய பண்புகளால் எல்லோரும் இவரில் பெருமதிப்பு வைத்தனர். எதிர்களேற்றவராயவராலும் பாராட்டப் பட்டவராக விளங்கினார். தமிழ், சமயம் ஆகியவற்றில் மிகுந்த புலமையுடையவராகவும் எடுத்த கருமத்தை திறம்படச் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவராகவும் விளங்கினார்.

மேற் காட்டப்பட்ட பெருங்குணம், பேரறிவு கருமங்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் ஆகியவற்றால் சமய சமூக அரசியல் துறைகளில் அனேக பதவிகளை வகித்தார். ஆனால் இவர் பதவிகளைத் தேடிப்போகவில்லை. பதவிகள் இவரைத் தேடி வந்தன. பதவிகளை அடைவதில் போட்டியில்லை, பொறுமையில்லை. மக்களின் வேண்டுதலின் பேரிலேயே பதவிகளை ஏற்றுக் கொண்டார். இவர் வேலணை கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கத்தில் பதினேழு ஆண்டுகள் தொடர்ந்து தலைவராக கடமையாற்றியதிலிருந்து இவரது செல்வாக்கை அளவிடலாம்.

ஆசிரியர் திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் மிக இளம் வயதிலேயே அ—து பதினெட்டு வயதில் சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தில் தமது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். உதவி ஆசிரியராக சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்திலும், வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் கடமையாற்றினார். அதிபராக 1952ம் ஆண்டு யா/ஆனைப்பந்தி குருநாதசுவாமி கோவில் தமிழ்ப்பாடசாலையில் நியமனம் பெற்றார். பின் யா/காரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயம், யா/காரம்பன் சிவகுருநாத வித்தியாசாலை, யா/வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலை ஆகியவற்றிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். யா/வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாலயத்திலிருந்தே ஓய்வு பெற்றார். அவருடைய ஆசிரியப் பணி மகத்தானது. மிகச் சிறந்த ஆசிரியராகவும், மிகச் சிறந்த நிர்வாகத் திறமையுள்ள அதிபராகவும் இருந்து தான் கடமையாற்றிய பாடசாலைகளின் மாணவர்களை கல்வியில் உயர்நிலையடைய வைத்த பெருந்தகையாளர். அவரிடம் கல்வி கற்றவர்கள் பட்டதாரிகளாக பொறியியலாளராக வைத்திய கலாநிதிகளாக வேறு பல உயர் பதவிகள் பெற்றவர்களாக விளங்குகிறார்கள். அதிலிருந்து அவரின் ஆசிரியப்பணியின் சிறப்பை அறியலாம். அவரிடம் படித்த மாணவர்கள் இப்படியான உயர்நிலை எய்தியதைக்கண்டு அவரே மிகப்பெரிய சந்தோஷம் அடைந்திருப்பார்.

### ஆத்திசூடி வித்தியாசாலை அதிபர்

திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அதிபர் அவர்கள் வேலணை வடக்கில் ஆத்திசூடி வித்தியாசாலையை ஸ்தாபித்த முன்னோடிகளில் ஒருவராகவும் முக்கியமானவராகவும் இருந்தார். அங்ஙனம் ஆத்திசூடி வித்தியாசாலையை ஸ்தாபித்து அதன் அதிபராகவும் இருந்தார். அவர் காலத்தில் அப்பாடசாலைக்கு நிரந்தரக்கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டது. அவர் அப்பாடசாலைக்குத் தேவையான சகல தேவைகளையும் நிறைவுறச் செய்து அப்பாடசாலை சகல வசதிகளையுமுடைய பாடசாலையாக்கினார். ஊர் மக்களின் பெருமதிப்புக்குரியவரானார். இவர் அப்பாடசாலையிலிருந்து ஓய்வு பெறும்போது ஊர் மக்கள் திரண்டு மிகச் சிறந்த பிரியாவிடை விழாவை செய்து அவரைக் கௌரவித்தார்கள்.

### வேலணை கிராமச் சங்க உறுப்பினர் / உபதலைவர்

வேலணைக் கிராமச் சங்கத்திற்கு ஐந்தாம் வட்டார உறுப்பினராக 1945-ம் ஆண்டு தொடக்கம் 1951-ம் ஆண்டு வரை இருதடவைகள் இருந்துள்ளார். கிராமசங்க உபதலைவராகவும் இருந்துள்ளார். தனது வட்டாரத்துக்கு சிறப்பாகவும் வேலணை கிராமச்சங்க பகுதிக்கு பொதுவாகவும் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடித்தார்.

### வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மாண்புறு தலைவர்

திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக அமர்ந்து பல ஆண்டுகள் கடமையாற்றி சங்கத்தை மிக உயர் நிலைக்கு கொண்டு வந்தார். அன்றியும் வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட வேலணை மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்களுக்கு சங்கத்தால் செய்ய வேண்டிய நன்மைகள் யாவற்றையும் குறைவின்றிச் செய்து முடித்தார். அதனால் அம்மக்களின் நன்றியையும் நன்மதிப்பையும் பெற்றார்.

### வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஒப்புவமையற்ற தலைவர்

திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் 1956-ம் ஆண்டு தொடக்கம் 1973-ம் ஆண்டுவரை பதினேழு ஆண்டுகள் வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க தலைவராக கடமையாற்றினார். இக்காலம் வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொற்காலமென பலரும் பாராட்டக் கூடியவகையில் அரும் பெரும் சேவைகள் பல செய்தார். இவரின் சேவைகள் எண்ணிலடங்கா.



1. வேலணையில் இரண்டு நெசவு நிலையங்களை ஸ்தாபித்து அதன் மூலம் நூற்றுக்கணக்கான பெண்பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார். அந்த இரண்டு நெசவு நிலையங்களுக்கும் நிரந்தரக் கட்டடங்களையும் அமைத்து வேறு பல வசதிகளையும் செய்து கொடுத்தார்.

2. குளங்களைப் பதித்தல், குளங்களை கட்டுவித்தல் ஆகிய வேலைகளைச் சிரமதான மூலம் செய்வித்து அவற்றை செய்து முடித்த பல நூற்றுக் கணக்கான மக்களுக்கு நிவாரண மாவு, சீனி பருப்பு, கருவாடு ஆகியவற்றைப் பெற்றுக் கொடுத்தார்.

3 வேலணை கிழக்கு ஒடுக்கமான ஒழுங்கைகளை சிரமதானப்பணிகள் மூலம் அகலுவித்துக் கொடுத்து ஊர் மக்களின் போக்கு வரத்துக்கு உதவிசெய்தார். புதிய பாதைகளையும் திறப்பித்துக் கொடுத்தார்.

4. வேலணை மக்களின் குடிநீர் தேவைக்காக சாட்டியிலும் வேலணை பெருங்குளத்திலும் இரு கிணறுகளை வெட்டி கட்டுவித்துக் கொடுத்தார். சோளாவத்தை கடலுக்கு ஒரு கிணறும். செம்படவன் காட்டு கடலுக்கு ஒரு கிணறும் ஆக இரு கிணறுகள் வெட்டி கட்டுவித்துக் கொடுத்தார்.

5. வேலணை கிழக்கில் குடி தண்ணீர் கஷ்டமான பகுதிகளில் தொட்டிகளை அமைத்து அதன் மூலம் வருடா வருடம் குடிநீர் வழங்க ஏற்பாடுகளை செய்தார்.

6. கலைமகள் சனசமூக நிலையம் வேலணை மேற்கு ஐயனார் சனசமூக நிலையம் ஆகிய நிலையங்களுக்கு வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க மூலம் நிரந்தரக் கட்டிடங்கள் அமைத்துக் கொடுத்தார்.

7. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆண்டு தோறும் ஆண்டு ஆறு வகுப்பில் சேரும் புதிய மாணவர்களுக்கு கட்டிட வசதி தளபாட வசதிகள் இல்லாமல் இருந்ததால் அவர்களை அவ்வித்தியாலயத்தில் சேர்க்க முடியாத நிலை காணப்பட்டது. புதிய பிள்ளைகளைச் சேர்க்காமல் விடக்கூடாது எனக் கருதி அதிபர் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு இணங்க வேலணை மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம் சரவணை கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடனும், புதிய மாணவர்களின் பெற்றோரின் உதவியும் பெற்று ஒவ்வொரு ஆண்டும் கொட்டில்களை அமைத்தும் புதிய தளபாடங்களைச் செய்வித்துக் கொடுத்தார். புதிய மாணவர்களைச் சேர்க்க வசதி செய்து கொடுத்தார் இவ்வாறு பல ஆண்டுகள் இவ்வசதி செய்து கொடுக்கப்பட்டது.

8. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட நூறு அடி நீளமான மண்டபமும் ஒரு களஞ்சிய அறையும் அரசாங்க உதவியுடன் வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தால் கட்டிக்கொடுக்கப் பட்டன.

9. வெதிரையல் கூடை பின்னுதல் போன்ற குடிசைக் கைத்தொழில்களுக்கு பயிற்சி கொடுப்பித்து அவற்றின் மூலம் பல நூற்றுக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்புப் பெற வழி செய்து கொடுத்தார். வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச்சங்கத்தின் மூலம் வவனிக்குளம், செட்டிகுளம், நாகபடுவான், முழங்காவில், சுதந்திரபுரம் போன்ற குடியேற்றத் திட்டங்களுக்கு வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் காலத்திற்கு காலம் பல காணிக் கச்சேரிகளை வைப்பித்து அக்காணிக் கச்சேரிகளில் வேலணை மக்களை பங்குபெறச் செய்து அதன் மூலம் நூற்றுக்கணக்கான மக்கள் மேற்குறிப்பிட்ட குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றப்பட்டனர்.

10. நடுத்தர வகுப்பினருக்கும் காணிக்கச்சேரிகள் மூலம் காணிகள் பெற வழிவகை செய்து கொடுத்தார் மேலே காட்டப்பட்ட அபிவிருத்தி வேலைகளை விட ஏழைகளுக்கு தர்மப்பணம்பெற்றுக் கொடுத்தல் யாழ். நகரில் உயர் கல்வி பெற மாணவருக்கு வழிவகை செய்து கொடுத்தல் போன்ற கருமங்களும் மேற்படி சங்கத்தால் செய்து கொடுக்கப்பட்டது இதைவிட இன்னும் பல அபிவிருத்தி வேலைகளை கிராம முன்னேற்றச் சங்க மூலம் செய்து முடித்தார்

### சமயத் தொண்டு

திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் அருள்மிகு பள்ளப்புலம் முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையின் போஷகராகவும், உபதலைவராகவும் பொருளாளராகவுமிருந்து அக்கோவிலின் அனேக திருப்பணிகளை நிறைவேற்றினார். இவர் சமய நூல்களில் புலமை பெற்றவராக விளங்கியபடியால் இவரது வீட்டிற்கண்மையிலுள்ள கோவில்களில் கந்தபுராண பயன் சொல்லியும், பிள்ளையார் கதை படித்தும், வாதவூரர் புராணபடிப்புக்களில் பயன் சொல்லியும் வந்தார் இது போன்ற அனேக சமயப் பணிகளைச் செய்தார்.

### இறுதிக்காலம்

திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் தமது இறுதிக் காலத்தில் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் கூடி வாழ்ந்து சந்தோஷமாக இருந்தார். அன்றியும் மிகுந்த கடவுள் பக்தியினாலும் சமய நூல்களை வாசித்தும் அமைதியும் ஆறுதலும் பெற்று வாழ்ந்து வந்தார்

**ச. மாணிக்கவாசகர்**
ஆசிரியர், வேலணை.

(இ-3335)

# விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்துக்கட்ட முடியாது

## இராணுவ அதிகாரி கணிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை முற்றாக ஒழித்துக்கட்டுவது சாத்தியமில்லை. என்றாலும் அவர்களைப் பலவீனப்படுத்தி பேச்சுக்கு வரவழைப்பதையாவது செய்து முடிக்கவேண்டுமென்று இராணுவ அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசியல் தீர்வு பேச்சுவார்த்தை என்று பல்வேறு விதமான பேச்சுக்கள் இருந்தாலும் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனமாக்கினால் மட்டுமே எதுவும் சாத்தியப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதே வேளை யாழ். குடாநாட்டில் நீண்டகாலமாக ஓய்ந்திருந்த இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

கிழக்கில் புலிகளுக்கெதிரான இராணுவ தாக்குதல் முடிவுக்கு வந்ததும் வடக்கு தாக்குதல் ஆரம்பமாகுமென்று கருதப்படுகிறது. (ரி)

# நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கென மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவுள்ளதாக கொழும்புப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பரீட்சார்த்திகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைப்பதில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக வடமாகாணத்துக்குரிய போட்டியாளர்களின் அனுமதி அட்டைகளைப் பரீட்சைத் திணைக்களத்தில் நேரடியாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. [161]

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY - VADDUKODDAI

## யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும் முழு நேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளன

வட்டுக்கோட்டையில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்:

### (1) Technician Diploma Courses:
(ஆங்கில மொழி மூலம்)

(i) Civil Engineering & Quantity Surveying — காலம் 2 வருடங்கள்
(ii) Electronics & Telecommunication Engineering — காலம் 3 வருடங்கள்
(iii) Mechanical Engineering — காலம் 3 வருடங்கள்
(iv) Electrical Engineering — காலம் 3 வருடங்கள்

கல்வித் தகைமை: G C.E.(O/L) கணிதம் C விஞ்ஞானம் C, ஆங்கிலம் S உட்பட ஆறு பாடங்களில் சித்தி

### (2) Diploma Courses:
காலம் 1 வருடம்

(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing
BASIC, COBOL d-BASE III+ Practical on IBM-PC AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை: G C E. (O/L) கணிதம் C உட்பட ஆறு பாடங்களில் சித்தி
காலம் 1 வருடம்
(iii) Advanced Diploma in Computing
(Syllabus includes British Computer Society & Australian Computer Society)
கல்வித்தகைமை: G.C.E.(O/L) கணிதம் C, ஆங்கிலம் S உடன் G.C.E. (A/L)ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி
காலம் — 1 வருடம்

### (3) Technician Ceritificate Course
(i) Radio & T. V. Servicing
கல்வித் தகைமை: G. C. E. (O/L) கணிதம் - S, விஞ்ஞானம் - S.
காலம் — 1 வருடம்

### (4) Craft Certificate Course:
(தமிழ் மொழி மூலம்)

மின்னிணைப்பு பயிற்சி: காலம் 1 வருடம்
(Electrical Wiring & Installation practice)
கல்வித்தகைமை: G C.E. (O/L) வரை படித்திருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்:

### (1) Technician Diploma Courses:
(ஆங்கில மொழிமூலம்)

(i) Civil Engineering & Quantity Surveying — காலம்: 2 வருடங்கள்
(ii) Electronics & Telecommunication Engineering — காலம் 3 வருடங்கள்
(iii) Mechanical Engineering
காலம் — 3 வருடங்கள்
(iv) Electrical Engineering
காலம் — 3 வருடங்கள்

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம் C, விஞ்ஞானம் C, ஆங்கிலம் S உட்பட 6 பாடங்களில் சித்தி

### (2) Diploma Courses:
காலம் — 1 வருடம்

(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing
(BASIC, COBOL & d BASEIII+) Practical on IBM - PC, AT & MAT 386 Industrial Controller
கல்வித் தகைமை: G. C. E. (O/L) கணிதம் C உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம் — 1 வருடம்
(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society)
கல்வித் தகைமை: G. C. E. (O/L) கணிதம் C, ஆங்கிலம் S உடன் G.C.E. (A/L) ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி
காலம் — ஒரு வருடம்

## விசேட கவனத்திற்கு:

★ பிறநாட்டுப் பரீட்சைகளை எடுக்கத்தக்கதாக (4) தவிர்ந்த எல்லாப் பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலமாக தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும். மேலும் இதற்குத் துணையாக பாடநெறிக்காலம் முழுவதும் ஆங்கில பாடம் கட்டாயமாக கற்பிக்கப்படும்.
★ பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து உதவித்தொகை வழங்கப்படும்.
★ நூலக வசதி உண்டு.
★ விடுதி வசதி ( ஆண்கள், பெண்கள் ) உண்டு.
★ விளையாட்டுத்துறை வசதிகள் உண்டு.

முக்கிய குறிப்பு:

★ விண்ணப்பப்படிவம் விலை ரூபா 30/-
பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் :-
(a) JCIT அலுவலகம், வட்டுக்கோட்டை
(b) JCIT, 182 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
★ விண்ணப்பப்படிவங்களை 30-08-1993 காலை 10-00 மணிக்கு முன்னர் JCIT அலுவலகம், வட்டுக்கோட்டையில் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.
★ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.
★ நேர்முகப் பரீட்சை 1-9-93, 2-9-93 ஆகிய நாட்களில் காலை 9-00 மணி முதல் JCIT அலுவலகம் வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

(ஏ-3317)

பணிப்பாளர்.


## ஓவியக் கண்காட்சி

(அரியாலை)

யாழ். மறைக் கல்வி நிலையத்தில் அண்மையில் திருமறை நூலின் ஆழ்ந்த கருத்துக்களையும், செய்திகளையும் வெளிப்படுத்தும் முறைமையாக ஓவியக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. (59)

## தையல் பயிற்சி வகுப்பு

(உடுவில்)

இராணுவ வன்முறைகளால் தமது நிரந்தர வதிவிடங்களை விட்டு இடம் பெயர்ந்தோருக்கான இலவச தையல் பயிற்சி வகுப்புகள் அண்மையில் உடுவிலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய சர்வோதய இரமதான இயக்கத்தின் மருதனார் மடம் பிரதேச நிலையத்தில் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (109)

அகதிகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கறிஞர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் மேற்படி மாநாட்டை ஒழுங்கு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## பிரேமா கொலை விசாரணை அறிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொலை பற்றி விசாரணை செய்த இரகசியப் பொலிசாரின் அறிக்கை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் கையளிக்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது (ம)

அமைச்சரவையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சராக இருந்த திரு ஹரோல்ட் ஹேரத் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட ஏனைய அமைச்சர்களினதும், மூன்று கருத்திட்ட அமைச்சர்களினதும் விபரங்கள் வருமாறு

திரு. டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார - கல்வி உயர்கல்வி, கலாசார அமைச்சர், ஜனாப் எம் எல். எம். அபுசாலி - தொழில், தொழில் பயிற்சி அமைச்சர், திரு. டிரோன் பெர்னாண்டோ தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர்.

புதிதாக நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட மூன்று கருத்திட்ட அமைச்சர்களின் விபரம் வருமாறு:

திரு. மகிந் குணசேகரா, சட்ட, சிறைச்சாலை, சீர்திருத்த அமைச்சர், திரு. திஸ்ஸ அத்தநாயக்கா, உதவி கல்வி அமைச்சர், திரு. மனோ விஜயரட்ண-பெருந்தோட்ட அமைச்சர்.

அமைச்சரவையில் திடீர் மாற்றங்கள் செய்யப்பட்டமையால் சில கருத்திட்ட அமைச்சர்களும் ராஜாங்க அமைச்சர்களும் மீண்டும் நேற்று புதிதாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்கள் அவர்களின் விபரங்கள் வருமாறு!

திருமதி சுனேத்திரா ரணசிங்க-கல்விச்சேவை கருத்திட்ட அமைச்சர், திரு. பி. கவிரத்தின-சமூக கலாச்சார கருத்திட்ட அமைச்சர், திரு. பி வி தேவராஜ்-இந்து கலாசார ராஜாங்க அமைச்சர், திரு. ஏ. ஜே. ரணசிங்க-தகவல், ஒலிபரப்பு ராஜாங்க அமைச்சர், திருமதி ஆர். புலேந்திரன்-கல்வி ராஜாங்க அமைச்சர், ஜனாப். ஏ எச். எம். அஸ்வர்-முஸ்லிம் சமய கலாச்சார அலுவலக ராஜாங்க அமைச்சர். —வி

# இந்தியாவுக்கு பிரபாகரனை கொண்டுவர சிறப்புக்குழு வேண்டும்

## - சுவாமி வலியுறுத்து

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பான விசாரணை குறித்து விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவர சிறப்புக் குழுவை அமைக்குமாறு ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அரசை வற்புறுத்தியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றிய அவர் தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவுக்கு அழைத்துவருவதில் சர்வதேச கருத்தை திரட்ட மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென்று குற்றம் சாட்டினார். [க]

## 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுகிழமை காலை 9-30 மணிக்கு நடைபெற உள்ள 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை யாழ் மாவட்டத்தில் 94 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை நடைமுறை பற்றிய விசேட அறிவுறுத்தல்களைப் பரீட்சை நிலைய உத்தியோகத்தர்களுக்கு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் வழங்கியுள்ளார். பரீட்சை ஒழுக்கு விதிகளையும், நடைமுறைகளையும் மீறுவோர் மீது திணைக்களம் ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும் எனவும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கைதிகளை அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர் அங்கிருந்து பலாலிக்கு அனுப்பப்பட்டனர். விமான மூலம் இவர்கள் இரத்மலானைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## ஒருவர் மட்டும் திரும்பவில்லை

யுத்தக் கைதிகளில் ஒருவரான பெரேரா என்ற பெபலிசாவின் மனைவியான சுனித்ரா பெரேரா மட்டும் இன்னமும் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார்.

கொழும்பு சென்ற கைதிகளின் உறவினர்கள் யுத்தக் கைதிகள் விடுவிப்புக் குறித்து அரசமட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்வர் என யுத்தக் கைதிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (க)

## 1129 இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

இவர்களுடன் ஐ நா. தூதரக அலுவலகப் பிரதிநிதிகள், தமிழக அகதிகள் நல ஒருங்கிணைப்பாளர் திரு. கி. என். இராமதாஸ், வெளியுறவு அமைச்சகத்தின் துணைச்செயலாளர் திரு. அறோரா ஆகியோர் அகதிகளின் வசதிகளைக் கவனிப்பதற்காக இவர்களுடன் உடன் சென்றனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அகதிகளே நேற்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் செல்லும் கப்பலுக்குப் பாதுகாப்பாக இந்திய கடலோர படையின் கப்பல்களும் சென்றன.

இந்த அகதிகள் இலங்கைக்கு சென்றதும் அரசு நடாத்தும் இடைக்கால முகாம்களில் ஐந்து நாட்கள் வரை பராமரிக்கப்பட்டு பின்னர் தத்தம் ஊர்களுக்கு அனுப்பப்படுவர்கள்.

இலங்கை அரசு இரண்டாயிரம் ரூபாவும், ஐ. நா. அகதிகள் நிறுவனம் ஐயாயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்களும் இந்த அகதிகளின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. —ரி

# காரைநகர் ராணுவம் மீது புலிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் படையினரின் இராணுவ காவலரண் மீது நேற்று முன் தினம் விடுதலைப் புலிகள் பலத்த ஷெல் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதேவேளையில் கடந்த திங்கட்கிழமை இரவும், செவ்வாய் இரவும் ஒட்டகப்புலம் இராணுவ காவலரணில் நிலை கொண்ட படையினர் மீதும் விடுதலைப்புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர்

ஒட்டகப்புலம் காவலரணில் நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகளால் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் படையினர் மத்தியில் இழப்புகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து நேற்று ஒட்டகப்புலம் காவலரணிலிருந்து மக்கள் வதியும் குடியிருப்புகளை நோக்கி படையினர் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். (க)

## ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் பின்வாங்கிமுகாம் சென்றதாகவும் தெரியவருகிறது. (க)

## இராஜாங்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இது இவருக்கு பதவி இறக்கம்என்றே கருதப்படுகிறது. (இ)

# மன்னார் பகுதியில் புக்காரா குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் கட்டியடம்பன் காட்டுப்பகுதியில் 'புக்காரா' விமானம் ஒன்று பலத்த குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4-30 மணியளவில் நடாத்தப்பட்டப்பட்ட இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து இதுவரையில் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. —க

## யாழ். ஐ. நோ. கூ. சங்கத்துக்கு

# 100 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. சங்கத்துக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் புதிய நூறு ஹொண்டா நீர் இறைக்கும் இயந்திரங்கள் வந்துள்ளன.

இவற்றில் 60 நீர்இறைக்கும் இயந்திரங்கள்ஏனைய ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட இருப்பதாகவும் மிகுதி 40 இயந்திரங்களும் யாழ்ப்பாணத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படுமென்றும் யாழ். ப நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சூ. சிறில் மெரில்தாஸ்.

யாழ். நகரில் வசிப்போரில் விவசாயத்தில் ஈடுபட்டுவரும் விவசாயிகள்தமக்குநீர் இறைக்கும் இயந்திரங்கள் தேவைப்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்றும் திரு. சிறில் மேலும் தெரிவித்தார். (வி)

## அகதிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டாவி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருப்போருக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக வந்திருந்தனர். (இ)

## வாரம் இருமுறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறினார்.

தமிழகத்திலுள்ள 155 அகதி முகாம்களில் எண்பதாயிரம் அகதிகள் இருப்பதையும் திரு. இராமதாஸ் சுட்டிக்காட்டினார். (ரி)

## நிதி பாதுகாப்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தம்மிடமே வைத்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும்பட்சத்தில் இந்த இரண்டு அமைச்சர் பதவிகளில் ஒன்று ஐ. ஐ. தே. முன்னணியின் முக்கிய புள்ளி ஒருவருக்கு வழங்கப்படும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழ் அகதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரத்தில் வேறுஒரு அளவுகோலை அது கடைப்பிடிக்கின்றது. இது ஒரு அநியாயமான செயல்"

இவ்வாறு முன்னாள் தமிழக அமைச்சர் திரு.வி.பி. சுவாமிநாதர் நேற்று செய்தியாளர் மத்தியில் கூறினார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று சென்னைத் துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (வி)

## ஒருநாள் கிரிக்கெட்: இலங்கை வெற்றி

(கொழும்பு)

இலங்கைக்கும்- இந்தியாவுக்குமிடையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது.

முதலாவது ஒருநாள்போட்டியில் இந்தியா ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றதுதெரிந்ததே. 3 வதும் இறுதியுமான ஒருநாள் போட்டிநாளை சனிக்கிழமை நடைபெறும். (வி)

## ஐ. ஐ. முன்னணி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியும் இணைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவருகிறது.

இரு தரப்பினரும் இதைப் பற்றி உறுதி செய்யவில்லை என்றும் இந்தக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களுக்கு இப்பொழுது என்னப் பொறுப்பு வழங்குவது என்பது குறித்து மட்டுமே முடிவு செய்யவேண்டியுள்ளது என அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். —இ

## இம்மாதம் முதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு இந்த மாதம் முதல் இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

இந்த சம்பள அதிகரிப்பு ஜூலை மாத நிலுவையுடன் சேர்த்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல தரப்பிலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கும் ஓய்வூதியர்கள், உள்ளூராட்சி, மாகாண ஊழியர்கள் மற்றும் அதிகாரசபை ஊழியர்களுக்கும் இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

இவர்கள் அனைவருக்கும் 60 சதவீத சம்பள அதிகரிப்பு கடந்த ஜனவரி மாதம் வழங்கப்பட்டது.

திறைசேரி நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்ததால் மிகுதி 40சதவீத சம்பள அதிகரிப்பை திட்டமிட்டபடி வழங்க முடியாதுபோய்விட்டதுஇதை 1984 ஆண்டு ஜனவரி மாதம் நிலுவையுடன் வழங்குவதென அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே (இ)

## இனப்பிரச்னை தீர்வு

# ஐ.நா. தலையீட்டை அரசு மீண்டும் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னையில் ஐ நா.சபை தலையிட வேண்டுமென நோபல் பரிசு பெற்ற நால்வர் வழங்கிய பரிந்துரைகளை இலங்கை அரசு மீண்டும் உத்தியோக பூர்வமாக நிராகரித்தது.

தமது பரிந்துரைகளை மீள்பரிசீலனை செய்யும்படி இலங்கை அரசுக்கு நோபல் பரிசு பெற்ற நால்வரும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவர்களின் வேண்டுகோளை இலங்கையரசு மீண்டும் உத்தியோக பூர்வமாக நிராகரித்து விட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (வி)

## கொழும்பில் நேற்று

# 1953-ம் ஆண்டு ஹர்த்தால் நினைவுகூரப்பட்டது

(கொழும்பு)

1953ம் ஆண்டு இடம்பெற்ற ஹர்த்தால் நினைவு கூருமுகமாக ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நேற்றுகொழும்பில் நடத்தப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் நேற்று நுகேகொடையில் இது தொடர்பான ஆர்ப்பாட்டக் கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேரணி நடத்தி பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.

ஆறு எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து இந்த ஆர்ப்பாட்ட பேரணிகளையும் கூட்டங்களையும் ஏற்பாடுசெய்திருந்தன. -இ

## பிலிப்பைன்சில்

# ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்க்கு மரணதண்டனை

(மணிலா)

பிலிப்பைன்சில் லஞ்சம் வாங்கும் அல்லது மோசடியில் ஈடுபடும் அரச ஊழியருக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

இது தொடர்பாக பிலிப்பைன்ஸ் செனட்சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை மூலம் பிலிப்பைன்சில் மோசடி, லஞ்சம் ஆகியவற்றை ஒழிக்க முடியும் என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸ் தெரிவித்துள்ளார். —க

# சீனாவில் பெருவெள்ளம் 380 பேர் பலி

(பீகிங்)

சீனாவின் செகியாங் மாகாணத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கினால் இதுவரை 380க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளார்கள் 20 லட்சம் குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

மேற்படி மாகாணத்தில் மழை தொடர்ந்து பெய்வதினால் 2800 கிராமங்கள் முற்றாக தண்ணீரில் மூழ்கிவிட்டதாகவும் இங்குள்ள மக்களை பாதுகாப்புப்படையினர், மிகவும் சிரமத்தின் மத்தியில் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்வதாகவும் 11 ஆயிரம் வர்த்தக நிலையங்கள் வெள்ளத்தினால் முற்றாக சேதமடைந்து விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## ஆணின் சடலம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் இவருடன் பயணமான அ. இளவேனி (23 வயது) என்பவர் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (170)

## கிளாலி படகு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டியைச்சேர்ந்த கமலாதேவி ராகவன் (வயது 52), தங்கம்மாசுந்தரலிங்கம் வயது 59) என அடையாளம் காணப்பட்டு சடலங்கள் உறவினர்களால் எடுத்துச்செல்லப்பட்டன. (162)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B